**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI</u>**

O.S. No.16 of 2023

Deposition of P.W.1

Name of the Witness: திரு.ஆர்.ரவி

Date : 20.03.2025

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

6) எனக்கு தற்போது 52 வயதாகிறது. நான் 1971ம் வருடம் 7வது மாதம் பிறந்தேன். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் மாமியார் பெயர் லட்சுமி. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள என்னுடைய ஆயில் மில் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள என்னுடைய தவிடு கடை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்னுடையது. அந்த புகைப்படத்தில் குறிப்பிடப்படுள்ள செக்எண்ணைய் கிடைக்கும் என்று குறிப்பிப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை என் நண்பர் வாங்கி விற்பார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு தருமபுரி ஆட்டுகாரம்பட்டியில் இருக்கும் வீடு. அதை எனக்கு என் மாமியார் வாங்கி கொடுத்தது. என்னிடம் காட்டப்படும் தருமபுரி சத்யா நகரில் உள்ள புகைப்படத்தில் உள்ள கட்டிடத்தில் தான் நான் நெல், சோளம், ஆரியம் அரைக்கும் குடிசை தொழில் செய்து வந்தேன். அந்த கட்டிடம் என்னுடையது.

7) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு தருமபுரி சத்யா நகரில் உள்ள வீடு. அது என்னுடைய மாமியாா லட்சுமியின் வீடு. அதில் தான் நான் தற்போது குடியிருந்து வருகிறேன். என் மாமியார் பெயரில் அந்த வீடு இருப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. புறம்போக்கு நிலம் என்பதால் அதற்கு ஆவணம் இருக்காது. இவற்றை தவிர

அன்னை சத்யா நகரில் எனக்கு வேறு சொத்துக்கள் கிடையாது. அன்னை சத்யா நகரில் இருக்கும் வீடு என் மாமியாரால் கட்டப்பட்டது. அது எப்போது கட்டப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் என் மாமியார் வீட்டில் வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்கிறேன். நான் 2003லிருந்து அந்த முகவரியில் வசித்து வருகிறேன்.

8) என்னிடம் காட்டப்படும் 18.05.1999 அடமான கட்டிடம் தருமபுரி கூட்டுறவு சங்கம் லிமிடெட் சத்யா நகரில் இருக்கும் வீட்டை நான் அடமானம் வைத்து கடன் பெற்றேன் என்றால் சரிதான். ரைஸ்மில் கட்டுவதற்காக அடமானம் போட்டேன். அந்த அடமான பத்திரம் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பி.சா.ஆ.1ல் நான் 1999லே அன்னை சத்யா நகரில் இருப்பதாக நான் குடியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சத்யா நகரில் உள்ளது என்னுடைய வீடு தான் என்றாலும், என் மாமியாருக்கு சொந்தமானது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9) 9.11.2012 அன்று நான் பணம் செலுத்தி அந்த கடனை செலுத்தியதற்கான ரசீது என்றால் சரிதான். என் மாமியார் பணம் கொடுத்து நான் அந்த கடனை அடைத்தேன். என் மாமியார் பணம் கொடுத்து பணத்தை நான் செலுத்தினேன் என்பதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பணத்தை என் மாமியார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10) என்னிடம் காட்டப்படும் 21.01.2024 கிரைய பத்திரம் படி நான் செம்மாண்டகுப்பத்தில் ஒரு வீட்டுமனை கிரையம் பெற்றுள்ளேன் என்றால்

சரிதான். அந்த கிரைய பத்திரம் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.என்னிடம் காட்டப்படும் 20.04.2009 கிரைய பத்திரம் படி நான் செம்மாண்டகுப்பத்தில் ஒரு வீட்டுமனை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரம் **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சொத்துக்களை வாங்குவதற்கு என் மாமியார் தான் பணம் கொடுத்தார். என் மாமியார் பணம் கொடுத்ததாக அந்த ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

11) தருமபுரி சத்யா நகரில் உள்ள நெல், ஆரியம், சோளம் அரவை மில்லிற்கு பதிவு சான்றிதழ் என் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். சத்யா நகரில் இருந்த அரவை மில்லை 2002ல் மூடி விட்டேன். வருமானமே இல்லை என்பதால் வருமான வரி கட்டவில்லை. எனக்கு எந்த சொத்துக்களும் வாங்குவதற்கு வருமானமே இல்லை. என் மாமியாரை நம்பி தான் நான் வாழ்ந்து வருகிறேன். என்னுடைய அனைத்து செலவுகளையும் அவர் தான் கவனித்து கொள்கிறார். ரைஸ்மில்லை தவிர நான் வருமானத்திற்கு எந்த தொழிலும் செய்யவில்லை.

12) நான் எந்த தொழிலும் செய்யவில்லை என்பதால் நான் அப்பாவிற்கு சம்பாதித்து வழக்கு சொத்துக்களை வாங்குவதற்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கூட்டு குடும்பமாக இருக்கும் போது கூட்டாக புளி வியாபாரம் செய்தேன். நான் அது போல் கூட்டாக வியாபாரம் செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூட்டாக வியாபாரம் செய்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் பெயரில் உள்ள சொத்துக்கள் கூட்டு

குடும்பமாக இருந்த போது வாங்கப்பட்டது கிடையாது. நான் அன்னை சத்யா நகரில் வீடு கட்ட பணம் வாங்கிய போது கூட்டு குடும்பமாக இல்லை.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*